# மக்கள் மறுவாழ்வு

மலர் : 5 | தை-ஜனவரி 1987 | விலை 75 காசுகள் | இதழ் : 4

## அரசு கட்டும் வீடுகளில் தாயகம் திரும்பியோருக்கு

# இடஒதுக்கீடு செய்க!

**"தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், குடிசைமாற்று வாரியம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வீட்டு வசதி கார்ப்பரேஷன் கட்டும் வீடுகளில் தாயகம் திரும்பியோருக்கு 10 சதவிதம் ஒதுக்க தகுந்த நடவடிக்கை எடுக்க மத்திய அரசு விடுத்த வேண்டுகோளை மேற்படி வாரியங்கள் இந்த அனைத்துலக வீடற்றோர் உறை வீட ஆண்டில் நிறைவேற்ற வேண்டும்"**

இவ்வாறு குடிபெயர்ந்தோர் மேம்பாட்டுக்கான சமூக நலச் சங்கம் வேண்டுகோள் விடுகிறது.

தாயகம் திரும்பியோர் பலர் தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கியின் வேலை வாய்ப்புத்திட்டத்தின் கீழ் வேலை வாய்ப்புப்பெற்று, சென்னை மற்றும் பெருநகர், சிறிய நகர் பகுதிகளில் குடியேறியுள்ளனர்.

இவர்கள் சுயமாக வீட்டுக் கடன் பெறுவதிலும், வீடுகட்டுவதற்கான மனைகள் வாங்குவதிலும் சிரமங்களை அனுபவித்து வருகிறார்கள் கூடுதலாக வாடகை கொடுத்தும் வாடகை வீடுகளில் வாழ முடியாத நிலை. இதனால் இவர்கள் மறுவாழ்வு திட்டத்தின் கீழ் பெற்ற வேலைகளின் கூட தொடர்ந்து நிலைக்க முடியாது இடம் பெயரும் நிலைக்கு உள்ளாகி விடுகிறார்கள். வங்கித் திட்டத்தின் கீழ் வேலை பெறுவோர் மட்டுமல்ல; இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய அனைவருமே இந்த சிரமங்களை அனுபவித்து வருகிறார்கள்.

தாயகம் திரும்பியோர் வீட்டுப் பிரச்சினையில் அடையும் சிரமங்களை கணக்கில் கொண்டுதான் தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கி நடவடிக்கை எடுத்தது. இரண்டு ஆண்டுகளுக்கு முன், அப்போது நிர்வாக இயக்குனராக இருந்த சுந்தரராஜ் இ.ஆ.ப. அவர்கள் இந்த பிரச்சனையில் மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்டார்.

வீட்டு வசதி வாரியம், குடிசை மாற்று வாரியம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வீட்டுவசதிகார்ப்பரேஷன் ஆகியவை அமைக்கும் வீடுகளில் குறைந்தது 10 சதவீதமாவது தாயகம் திரும்பியோருக்கு ஒதுக்க வேண்டும் என மேற்படி வாரியங்களுக்கு வங்கி தீர்மானம் ஒன்றை அனுப்பியது (வங்கியின் கடித எண்: ஆர்சி, 408/85 ஆர் 3 நாள்: 15 2.85) மத்திய அரசும் தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கியின் தீர்மானத்தை ஆதரித்து மேற்படி ஒதுக்கீடு செய்ய தகுந்த நடவடிக்கை எடுக்க மாநில அரசைக் கேட்டுக் கொண்டது (கடித எண்; 2(5)/85-டெஸ்க் 11 நாள் 25.2.85).

மாநில அரசும் மறு வாழ்வுத் துறையை உரிய நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டது (நிர்வாக இயக்குனர் மூலம் வங்கியால் அளிக்கப்பட்ட இச்செய்தி 1985 ஏப்ரல் மக்கள் மறுவாழ்வில் பிரசுரிக்கப்பட்டுள்ளது)

ஆயினும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாக தெரியவில்லை. ஒதுக்கீட்டின் கீழ் தாயகம் திரும்பியோருக்கு வீடும் கிடைக்க வில்லை அனைத்துலக வீடற்றோர் உறைவிட ஆண்டாக விளங்கும் இந்த ஆண்டிலாவது இந்த ஒதுக்கீடு குறித்து நடவடிக்கை எடுப்பார்களா?

அனைத்து வீட்டு வசதி துறையினருக்கும் வீடற்ற தாயகம் திரும்பியோர்களுக்கு 10 சதவீத ஒதுக்கீடு அளித்து ஒரு கூரையின் வாழ வழிவகுக்குமா? என்று கேட்டுள்ளது O

---

## கட்டுரைப் போட்டியில் பரிசு பெற்றோர்

டெக்ராஸ் டிசம்பர் 7-ல் தமிழ் நாடு முழுவதும் ஏற்பாடு செய்த தாயகம் திரும்பியோர் தினத்தை யொட்டி நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் இருவர் பரிசு பெற்றனர்.

முதல் பரிசு ரூபா 800/-யை திண்டுக்கல்) திரு, எஸ். பன்னீர் செல்வம் பெற்றுள்ளார். இரண்டாவதுபரிசு ரூபா 200/- சிவ கங்கை திரு. எம். ஸ்டீபன் அவர்களுக்கு கிடைத்துள்ளது.

மக்கள் மறுவாழ்வு

மலர். 5 தை—ஜனவரி '87 இதழ்: 4

# இந்த ஆண்டின் இலட்சியம்

புத்தாண்டு மலர்ந்து விட்டது. வாசகர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் நண்பர்களுக்கும் எமது இனிய புத்தாண்டு வாழ்த்துகள்.

தைப்பிறந்தால் வழிபிறக்கும் என்பார்கள் விழி மூடி ஏதும் செய்யத்தோன்றாது- செய்ய முடியாது இருக்கும் மக்கள் நலம் பெற வேண்டும் என்பதும் அந்த நலனுக்கான காரியங்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டுமென்பதுவுமே எமது பேரவா

வண்டிச்சக்கரம் சுழல அச்சாணி எத்துணை அவசியமோ அத்துணை அவசியம் உணவும், உடையும், உறைவிடமும் மனிதனின் வாழ்க்கை வண்டி உருண்டோட.

உறைவிடம் இல்லாத மக்களுக்கு உறைவிடம் கிடைக்க வேண்டும்; அதற்கான பணிகளை முன்னெடுத்துச் செல்வது என்ற லட்சியத்தோடு இந்த ஆண்டை, அனைத்துலக வீடற்றோர் உடைவிட ஆண்டாக அனைத்து நாடுகள் சபை பிரகடனப்படுத்தி இருக்கிறது.

நாமும் இந்த லட்சியத்தை மனதில் கொண்டு வீடற்று இருக்கும் மக்கள் அனைவருக்கும் வீடுகிடைக்க வேண்டுமென்ற வேட்கையுடன் பணியில் இறங்குவோமாக!

தாயகம் திரும்பியோர்களின் வீட்டுப் பிரச்சனைகளை பொருத்தவரை-

இடைத்தரகர்கள் காண்டிராக்காரர்கள் செய்த ஊழல்களை கண்டறிய கமிஷன் நியமிக்க வேண்டும்.

இவர்களால் பூர்த்தியாகாத வீடுகள் கட்டிமுடிக்க கடனுதவி அளிக்க வேண்டும்

வீட்டுக்கடனை பெறுவதிலுள்ள காலக் கெடுவை நீக்க வேண்டும்.

ஊழல்களை தடுக்கும் வகையில் கூட்டுறவு வசதி சங்கங்களிடம் வீடுகட்டுவதை ஒப்படைக்க வேண்டும்

அரசே வீட்டு வசதி வாரியம் குடிசைமாற்று வாரியம் ஆதிதிராவிடர் வீட்டுவசதி கார்ப்பரேஷன்-முதலானவைகள் மூலம் வீடுகட்டிக்கெடுக்க வேண்டும்

மேற்படி வாரியங்கள் கட்டும் வீடுகளில் இட ஒதுக்கீடு செய்ய வேண்டும்

வீடுகட்ட வழங்கும் கடனுதவி சம்பந்தமாக தாயகம் திரும்பியோருக்கு இருக்கும் அத்தனை சலுகைகளையும் செயல்படுத்த அரசு முன்வர வேண்டும்

இந்த கோரிக்கைகளை முன்வைத்து தாயகம் திரும்பியோர் போராட முன்வர வேண்டும். தாயகம் திரும்பியோர் சம்பந்தப்பட்ட அனைத்து அமைப்புகளும் ஒன்றுபட்டு கோரிக்கைகளை முன்வைக்க வேண்டும்.

இந்த ஆண்டின் லட்சியத்தை மனத்தில் கொண்டு தொடர்ந்து மத்திய-மாநில அரசுகளை வற்புறுத்த வேண்டும்.

இந்த ஆண்டின் குறிக்கோளை நிறைவேற்றும் வகையில் தாயகம் திரும்பியோர்களின் வீட்டுப்பிரச்சனை கணிசமாக முடிந்தது என்று எண்ணுமளவிற்கு பிரச்சனையை முன்னெடுத்து செல்வோம். O




# வியாபார வீட்டுக்கடன் கொடுக்க மறுப்பதேன்?

நான் 31. 1. 71ல் இலங்கை அகதியாக தாயகம் வந்தேன். என் குடும்பத்தில் 4 நபர்கள் உண்டு. வியாபார, வீட்டுக் கடன் இரண்டும் பெற கண்டி மறுவாழ்வு அலுவலகம் சிபாரிசு செய்துள்ளது. 12. 2. 73ல் துறையூர் வட்டம் ஒக்கரை கிராமத்திலிருந்து விண்ணப்பம் செய்தேன். எந்தவித மான நடவடிக்கையும் இல்லாததால் என்னுடைய பயண ஆவணங்களை சென்னை மறுவாழ்வு இயக்குனர் அவர்களுக்கு அனுப்பினேன்.

மறுவாழ்வு இயக்குனர் திருச்சி மாவட்ட வருவாய் அதிகாரி (மறுவாழ்வு) அவர்களுக்கு அனுப்பி வைத்தார்.

எல். டிஸ். 9088 - 77 நாள் 20. 2. 77 இந்த இலக்கத்தில் சென்னை (ம.வா) இயக்குனர் அவர்கள் திருச்சி மாவட்ட வருவாய் அதிகாரி (ம.வா) அலுவலகத்துக்கு அனுப்பப்பட்டது.

திருச்சியிலிருந்து 5. 3. 77ல் முசிறி (ம. வா.) அலுவலகத்துக்கு அனுப்பினார்கள். எண். கே. டிஸ். 3280-77 முசிறி அலுவலகத்தில் கடன் வழங்கும்படி கேட்டேன். ஃபைல் காணவில்லை என்று கூறிவிட்டு ஆவணங்கள் கிடைத்தால் கடன் வழங்கப்படும் என்று கூறிவிட்டார்கள். பலமுறை அலைந்தேன். பயனில்லை என் மனைவி இறந்தாள். தந்தை இறந்தார். நான் ஸ்கூட்டரில் அடிபட்டு விபத்துக்குள்ளாகி 1 வருடம் திருச்சி பெரிய ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றேன். 93-94 மறுவாழ்வு இயக்குனர் அவர்கள் தணிக்கையில் பயண ஆவணங்கள் கிடைத்ததால் 22. 4. 86ல பயண ஆவணங்கள் முசிறியில் என்னிடம் வழங்கப்பட்டது. எனக்கு கடன் இல்லை என்கிறார்கள். அய்யா நான் ஏழை. வறுமை தாங்க முடியவில்லை. என் பிள்ளைகளுக்காவது பார்த்து உதவி செய்யுங்கள் நான் உதவி கேட்டு (மறுவாழ்வு) அலுவலர்கள் முசிறி திருச்சி சென்னை வரை உரிய காலத்தில் தொடர்பு கொண்டுள்ளேன். குடும்பத்துக்கு வழங்கும் கடனால் அதிகாரிகளுக்கு தொல்லை வராது கருணை புரிவது உங்கள் கடமை.

சென்னையிலிருந்து பயண ஆவணங்கள் திருச்சிக்கு அனுப்பியது 20. 7. 77 தாயகம் வந்தது 31. 1. 1973. மறுவாழ்வு உதவி கேட்டு மனு 12,2 1973 கடன் கிடைக்காமல் சென்னை (ம.வா.) இயக்குனர் அவர்களின் தொடர்பு 20. 2 77 எல் டிஸ் 8688/77; திருச்சி எண். கே. டிஸ். 32802/77 நாள் 5.3.77 தொடர்புகள் கொண்டேன். தாமதம் என்னால் ஏற்பட்டதில்லை என்பதை மிகவும் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொன்னுசாமி

எதுமலை கிராமம்,
லால்குடி வட்டம்.

# வீட்டைக் கட்டிப் பார்ப்பது என்பது தாயகம் திரும்பியோருக்கு ஒரு கனவு !

'வீட்டைக் கட்டிப்பார்; கல்யாணம் செய்துப்பார்' என்பார்கள். இந்த பழமொழிக்கு ஏற்ற படி தாயகம் திரும்பியோர்களைப் பொறுத்தவரை வீட்டைக் கட்டிப்பார்ப்பது கனவாகவே இருக்கிறது.

அரசைப் பொறுத்தவரை தாயகம் திரும்பியோர்களுக்கு மறுவாழ்வு திட்டத்தின் வீட்டுக் கடனுதவி அளித்து வருகிறது-நகரப்புறத்திற்கு ரூபா 10,000, கிராமப்புறத்திற்கு ரூபா 6,000 என்று.

ஆனால் இந்த கடன் உதவியை தாயகம் திரும்பிய குடும்பங்கள் அனைத்தும் பெற்றுவிட்டனவா? அவர்கள் அனைவரும் வீட்டைக் கட்டிப் பார்த்து விட்டார்களா என்பது தான்?


1984 டிசம்பர் 31-ந் தேதி வரை 4,59, 327 பேர்கள் அடங்கிய 1,15,400 குடும்பங்கள் இந்தியா திரும்பி இருக்கிறார்கள். இவர்களில் 38,775 குடும்பங்கள் அளவில் தான் வீட்டுக்கடன் உதவி பெற்றிருக்கிறார்கள். இப்படி வீட்டுக்கடன் பெற்றவர்கள் அனைவருமே வீட்டைக் கட்டிப்பார்த்து விட்டார்களா? கட்டிக் குடியிருக்கிறார்களா?

இதற்கும் முகம் சுழித்துக் கொண்டுதான் பதில் சொல்ல வேண்டிய நிலை.

கடன் பெற்றவர்கள் ஒரு 30 சதவீதத்தினர் மட்டும் தான் முறையாக வீடுகளை கட்டி வாழ்ந்து வருகிறார்கள் 70 சதவீதமானவர்கள் கடன் பெற்றும் வீட்டைக்கட்டிப் பார்க்க முடியவில்லை. அவர்கள் இடைத்தரகர்களிடமும் ஏமாந்துப் போனார்கள் மேற்படியார்கள் அவர்களின் வீடுகட்டும் பணத்தை சுருட்டிக் கொண்டு ஏப்பம் விட்டு விட்டார்கள்.

தாயகம் திரும்பியோர்களுக்கு வீடுகட்டிக் கொடுக்கிறோம் என்று இந்த இடைத்தரகர்களும், காண்டிராக்காரர்களும் 'அமைத்த' காலனிகள் எழுபதுக்கு மேல் என்பது என்று ஒரு கணிப்பு புதுக்கோட்டை, திருச்சி, திருநெல்வேலி, தஞ்சாவூர், நீலகிரி மாவட்டங்களிலே பெரும்பான்மையாக இந்த காலனிகள் ஆரம்பிக்கப் பட்டன.

அங்கு சென்று பார்த்தால் தெரியும் தாயகம் திரும்பியோர் எப்படி வீட்டைக் கட்டிப் பார்த்திருக்கிறார்கள் என்று.



காண்டிராக்ட்காரர்களால் (புதுக்கோட்டை பகுதியில்) கட்டப்பட்ட வீடு அத்திவாரத்தோடு நிற்கும் காட்சி

அந்த காலனிகளும்-அங்குள்ள வீடுகளும் ஆயிரம் கதைகள் சொல்லும்.

அத்திவாரம் வெட்டி தோடு இருக்கும் வீடுகள், அரை அடி அவர் மட்டும் எழுந்த வீடுகள், குட்டிச்சுவராய் நிற்கும் வீடுகள், கூரை வேயாது நின்று போன வீடுகள், கட்டி முடித்து காணாமல் போன வீடுகள் என பல காட்சிகளைக் காணலாம்.

அவை தாயகம் திரும்பியோர் வீட்டைக் கட்டிப் பார்க்கக் கண்ட கனவு களைக் கூறும்.

*

தாயகம் திரும்பியோர்களில் மறுவாழ்வு திட்டத்தின் மூலம் தேயிலை, ரப்பர் தோட்டங்களுக்கு போனவர்கள் அதிர்ஷ்டசாலிகள்.

நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் வட்டத்தில் தமிழ்நாடு தேயிலைக் கழகத்தோட்டங்களில் குடியமர்த்தப்பட்டவர்கள்; கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் தோட்டங்களில் குடியமர்த்தப் பட்டவர்களுக்கு வீட்டு வசதி அளிக்கப்பட்டிருக்கிறது-இலங்கைத் தோட்டங்களில் குடியிருந்த விடுகளை விட இது வசதியானது என்பதை மறுக்க முடியாது.

தமிழ் நாட்டில் மட்டுமல்ல கர்னாடகத்தில் சுள்ளியா, சுப்பிரமணியா ரப்பர் தோட்டங்களில் குடியமர்த்தப்பட்டவர்களுக்கும், கேரளாவில் புனலூர் உள்ள ரப்பர் தோட்டங்களில் குடியமர்த்தவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப் பட்டிருக்கின்றன.

காற்றோட்டம், வெளிச்சம், குடிநீர் வசதி என்று உரிய வசதிகள் கிடைத்திருப்பது குறிப்பிடத்தக்கது-இந்த வீடுகள் அரசால்-தோட்ட நிர்வாகங்கள் மூலமாகவே கட்டப்பட்டு கொடுக்கப்பட்டுள்ளன.


தோட்டங்களில் குடியமர்த்தப் பட்டவர்களில் சிலருக்கு இன்னும் வீட்டு வசதி கிடைக்காவிட்டாலும் வீட்டுப் பிரச்சனைக்காக இவர்கள் அல்லல்படும் நிலைக்கு அப்பால் பட்டவர்களாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால்—

தோட்டங்களுக்கு அல்லாது வியாபாரக்கடன் பெற்றுக் கொண்டு வந்தவர்கள்-நூற்பாலை, சர்க்கரை ஆலை என்று வந்தவர்கள் கூட மறுவாழ்வுத்திட்டத்தின் கீழ் சொந்த முயற்சியில் கடன் பெற்றவர்கள் நிலைமை மிகவும் வருந்தத்தக்கது - வீட்டுப் பிரச்சனை துயரம் மிகுந்தது அன்றே கூறவேண்டும்.

வேலை வாய்ப்பு இல்லாதவர்கள், போதிய வருமானம்

(4-ம் பக்கம் பார்க்க)



கர்னாடக ரப்பர் தோட்டத்தில் தாயகம் திரும்பியோர் வாழும் வீடுகள்

வீட்டுக்கடனுக்கு மனு செய்ய முடியாதவர்களாகிறார்கள். இதனால் மனு செய்வதற்கான காலக்கெடு முடிந்து விடுகிறது.

பொருளாதார சூழ்நிலைகளால் - இந்த நாடு பற்றிய அனுபவமின்மையாலும் வீடு கட்டுவதற்கான மனை தேட முடியாதவர்களாக இருக்கிறார்கள்.

இதன் காரணமாக இன்னொருவர் துணையை நாட வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். இதை பயன்படுத்திக்கொண்டு இடைத்தரகர்கள் காண்டிராக்காரர்கள் புகுந்து விடுகிறார்கள்.

இவர்களிடம் தமது மறு வாழ்வு உதவிக்கான சிபார்சு

வாசகர்களுக்கும்
ஆதரவாளர்க்கும்
எமது
புத்தாண்டு-
தமிழர் திருநாள்
வாழ்த்துக்கள்

# பாலிதீன் சமூகமாக மாறுகின்றனர்!

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இல்லாதவர்கள் வாடகை வீட்டில் இருக்க சக்தியற்ற நிலையில் தெருவோரங்களிலும் ஊர்கோடிகளிலும், - மலைச் சரிவுகளிலெல்லாம் வாழ்வதை காணலாம்.

மூன்று நான்கடி உயரத்தில், ஆறே அடிக்கு மேற்படாத நீள அகலத்தில் குடிசை என்ற பெயரில் கட்டிக் கொண்டு வாழ்வதை காணலாம்-இவற்றை மண்ணாலும், பாய்களாலும், தகர டின்களாலும், சாக்குகளாலும், இலை சருகுகளாலும், பாலிதீன் சீட்டுகளாலும் கட்டி இருப்பதை பார்க்கலாம்.

மழையோ, வெயிலோ, பனியோ இதற்குள்ளே ஏழு எட்டு பேர்கள் - குடும்பத்தில் இருக்கும் அனைவரும் வாழ்ந்து வருகிறார்கள்,

ஏன் இவர்களுக்கு விமோசனம் இல்லையா?

இவர்கள் அத்தனை பேருக்குமே வீட்டுக்கடன் பெற உரிமையுண்டு. மறு வாழ்வு திட்டத்தின் கீழ் வீட்டுக்கடன் பெற தகுதி பெற்றவர்கள் தான்.

அப்படி இருந்தும் இவர்கள் இந்த நிலைமைக்கு வர காரணம்-

இந்தியா திரும்பும் தாயகம் திரும்புவோர் தமது மறு வாழ்வை அமைக்கவே பல வருடங்களாகிறது. அதற்குள் அவர்கள் வீட்டுமனைதேடி, செய்யும் குடும்ப அட்டை ஆவணங்களை ஒப்படைக்கிறார்கள்-அவற்றை அவர்களிடமிருந்து மீண்டும் பெற முடிவதில்லை - வீடுகட்டித் தரப்படுவது மில்லை,

வேலை வாய்ப்பில்லாமல் மாவட்டம் வீட்டு மாவட்டம் குறிப்பாக மலைப்பகுதிகளில் குடியேறுகிறார்கள்.

இப்படி பட்ட காரணங்களால் வீடற்ற இவர்கள் இவர்களுக்கென ஓர் உறைவிடமில்லாத நிலையில் தெருவோரத்திலும், ஒதுக்குப்புறங்களிலும் மண், காகிதம், காய்ந்து சருகுகள், பாலிதீன்களான சின்னஞ்சிறு காட்டுக்குள் வாழும் நிலைக்கு தள்ளப் பட்டிருக்கிறார்கள். O



மலைச்சரிவுகளில் தண்ணீர் வசதி, சாலை வசதி இல்லாத நிலையில் கட்டியுள்ள குடிசைகள்

## நீங்கள் தெரிந்துக் கொள்ள:

# தாயகம் திரும்பியோர் வீடு கட்ட அரசு அளிக்கும் உதவி என்ன?

(1964லிருந்து 1984 வரை இந்தியாவுக்கு 1,15,400 குடும்பங்கள் திரும்பியிருக்கிறார்கள். இவர்களில் 88,775 பேருக்கே வீட்டுக்கடன் **'கிடைத்து'** இருக்கிறது இன்னும் சுமார் 70,000 குடும்பங்கள் வீட்டுக்கடன் பெறவில்லை. இந்த வீட்டுக் **கடன் கிடைப்பதில்** பல முறைகேடுகள், குறுக்கீடுகள், இடர்ப்பாடுகள் இருந்து வருகிறது- பலருக்கு இந்த வீட்டுக் கடனை எப்படி பெறுவது எப்படி அளிக்கப்படுகிறது என்றுகூட தெரியாது இருக்கிறது.

**அனைத்துலக விடற்றோர் உறைவிட ஆண்டாக** திகழ ஆரம்பித்திருக்கும் இந்த ஆண்டையொட்டி மறுவாழ்வு திட்டத்தின் கீழ் தாயகம் திரும்பியோர்களில் **உறைவிட** வசதிக்கு அரசு அமுல்படுத்தி திட்டங்களின் விபரங்களின் விபரங்களை இங்கு தருகிறோம்

(ஆசிரியர்)

---

தாயகம் திரும்பியோர்களுக்கு மறுவாழ்வு உதவித்திட்டத்தின் கீழ் வீட்டுக்கடன் அளிப்பதுவும் ஒன்றாகும்.

## தகுதி:-

இலங்கையிலிருந்து சிறிமாவோ சாஸ்திரி ஒப்பந்தத்தின் அடிப்படையில் 1964-ம் ஆண்டு நவம்பர் முதல் திகதிக்குப் பின்னால் இந்தியா திரும்பிய தாயகம் திரும்பியவர்கள் அனைவரும் இவ் வீட்டுக்கடன் பெற தகுதியுடையவர்களாவர்.


## தகுதியற்றவர்

இந்த வீட்டுக்கடன் பொதுவாக குடும்பத்தின் தலைவருக்கே வழங்கப்படும். ஒரு குடும்பத்தில் தனிஒருவர் மட்டுமே இருந்தால் அவர் இக்கடன் பெற தகுதிஅற்றவர். குடும்பத்தை விட்டு முன்னதாக ஒருவர் வந்திருந்தால் அவர் வியாபாரக்கடன் பெற்றிருந்தால் இக்கடன் பெற தகுதியுடையராகிறார். அதற்கென உள்ள பாரத்தில் விண்ணப்பிக்கலாம்.

அதே வேளையில் இவர்கள் வீட்டுக்கடன் பெறுவதற்கான சிபார்சை அல்லது உத்தரவை தமக்கு இலங்கையில் இந்திய துணை தூதரகத்தின் மறுவாழ்வு முதல் செயலாளரால் வழங்கப்படும் மறு வாழ்வு உதவி பெறுவதற்காக வழங்கப்படும் குடும்ப அட்டை குறித்துக் கொண்டு வந்திருக்க வேண்டும்.

இந்தியாவில் தமது பூர்விக கிராமங்களில்-ஊர்களில் வீடு, வீட்டுக்கான மனை, வியாபாரக்கட்டிடம் என்று ஏதேனும் சொந்தமாக உள்ளவர்கள் இந்த கடன் பெற தகுதியற்றவர்கள் குடும்பத்தலைவர் தமது பெயரில் மட்டுமல்ல; தமது மனைவி, மகன், தாய்மை தங்கி இருக்கும் தமது மகளின் பெயரால் மேற்படி சொத்துக்கள் உடையவர்களும் விட்டுக் கடன் பெற தகுதியற்றவர்.

மத்திய, மாநில அரசுகளினால் கட்டப்பட்ட கடைகள், கட்டிடங்கள் பெற்றவர்கள், வியாபார கட்டிடம் கட்டுவதற்கான கடன் பெற தகுதியற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



புதுக்கோட்டைப் பகுதியில் கான்டிராக்காரர்களால் (அரசுகடனின்) கட்டப்பட்ட வீடுகள்; ஓடுகள் சூறையிடப்பட்டு வாழ வசிக்கலாயக்கற்ற நிலையில் இருக்கிறது.

## வியாபாரத்திற்கு கடைகட்டுதல்:

விவசாயம் (தேயிலை ரப்பர் தோட்டத் தொழிலாளர், கள்) சம்பந்தப்பட்ட துறைகளைச்சாராத. தாயகம் திரும்பியோர், வியாபாரத்திற்கான கடன்பெற தகுதியுடையவர்கள். இப்படி வியாபாரக் கடன் பெற்றோர் வியாபாரத்திற்கான கட்டிடம் கட்ட கடன் பெறலாம்.

## செலவிடும் முறை

விடுகட்டுவதற்கான வரையறை செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ள தொகையை தேவைக்கேற்ப உயர்த்தியோ, குறைத்தோ செய்யலாம்.

கிராமப்புறங்களில் அல்லது நகரப்புறங்களிலுள்ள விவசாயம் மற்றும் விவசாய மல்லாத பகுதிகளிலும் குடியமர்ந்தால், அவர்கள் தாம் பெற்ற கடனை வீடு கட்ட பயன்படுத்தும் போது சிற்சிலப் பொருட்களுக்கு இவ்வளவு தான் செலவிடப்பட வேண்டும் என வரையறுக்கப்பட்ட தொகையிலிருந்து தத்தமது தேவைகேற்ப செலவினங்களை உயர்த்திக்கொள்ளலாம் அல்லது தாழ்த்திக் கொள்ளலாம்.

வீடும், வியாபார நிலையமும் ஒன்றாக கட்டும் பட்சத்தில் வியாபார நிலையம் கட்டுவதற்கு வழங்கப்படும் தொகையையும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

## வாடகை வசதி

மாதவாடகை அடிப்படையில் கடைகள், ஸ்டால்கள் அமர்த்தி தொழில் செய்கிறவர்கள், வியாபார நிலையங்களை கட்ட கடனுதவிக்கு அனுமதிக்கப்பட்டவர்களாயின், வாடகைக்கான தொகையை கடனாக பெற வசதியுண்டு.

மாறக கடன் அளிக்க அதிகாரம் பெற்றவர்கள் தகுதியான வியாபார நிலையத்தை ஏற்படுத்திக் கொடுத்து, அதற்கான வாடகையை அவர்

(11-ம் பக்கம் பார்க்க)

# உறைவிடம் மனிதனின்

உணவு, உடை, உறைவிட இம் மூன்றும் மனிதனின் ஜீவாதாரங்கள் அறிவியல் யுகத்தில் மாடிகட்டிடங்கள் வண்ண கண்ணாடி அமைப்புகள், இடம் பெயரக்கூடிய மாடிக் கட்டிடங்கள் என பலவகையான முன்னேற்றங்கள்.

ஆனால் கூரையே என்னவென்று தெரியாது வாழும் குடும்பங்கள் நாட்டின் நகரப் புறங்களில் மூவித்துக்கிடக்கின்றன. நடைபாதையில் படுத்துறங்கும் மக்களின் எண்ணிக்கை பம்பாயில் மட்டும் 25 லட்சத்திற்கு மேல். மூன்றாம் உலக நாடுகளில் இந்த அவலங்கள் முன்னேறிய மேலை நாடுகளையும் விட்டு வைக்கவில்லை.

சுயபாதுகாப்பு கருதி வீடுகளை அமைத்துக் கொள்வது என்பது மனிதனின் கண்டுபிடிப்பல்ல; மனித இனம் தோன்றுவதற்கு முன்பே விலங்குகள் பாதுகாப்புக்கென சமூகமாக வாழக்கற்றுக் கொண்டபோது, (பறவைகள் முதல் எறும்புகள்வரை) உறைவிடத்தை ஏற்படுத்திக் கொள்ளவும் கற்றுக் கொண்டன.

மனிதன் பலவகை முன்னேற்றங்களைக் கண்டும் தன்னில் ஒரு பிரிவினரை பாலிதீன் சமூகமாக விட்டுவைத்திருக்கிறான். உற்பத்தி பகிர்தளிப்பிலுள்ள குறைகளால் தெருவோர மகாராஜாக்கள் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போகிறது.

இந்திய அரசியல் சட்டம் 21-ம் பிரிவு, ''எந்த ஒரு தனி மனிதனுக்கும் அவனுடைய வாழ்வோ அல்லது வாழ்க்கை அந்தரங்கங்களோ மறுக்கப்படகூடாது'' என கூறுகிறது.

உணவு, உடை, உறைவிடம் இல்லாதவன் எப்படி வாழ்க்கையின் உரிமைகளை அனுபவிக்க முடியும்? உறைவிடம் அற்றவனுக்கு பருவ கால மாறுதல்களோடுபோராடி உயிர் வாழ நினைப்பதே பெரும் சிந்தனையாக இருக்கும் அவனுக்கு எங்கே சுதந்திர உணர்வுகள் வரும்.

வீடுடையோர்களில் பெரும் பகுதியினரும் படும் அவதி கொஞ்சநஞ்சமல்ல; குடிசை வாழ்மக்களை நினைத்துப் பாருங்கள் யாராவது ஒருவர் புகைத்து இழுத்த சிகரட்டை அணைத்து எறிய மறந்து விட்டார் என்றால் குறைந்தது நூறு குடிசைகளாவது காலியாகிவிடும். வெள்ளம் (வருடா வருடம் வருவது தானே) வந்தால் மாநகராட்சி பள்ளிகளே புகலிடமாய் ஓடும் கூட்டங்கள் எத்தனை?

கழிப்பிட வசதியை இவர்களால் என்றைக்கும் கற்பனை செய்துக்கூட பார்க்க முடியாது. சுத்தமான குடிதண்ணீர்? கங்கையை கொணர்ந்த பகீரதன் வந்தாலும் முடியாது போலிருக்கிறது.


நடுத்தரவர்க்கம் நடத்தும் வீட்டு வாடகைப் போராட்டம் கொஞ்ச நஞ்சமல்ல; உலக அக்கிரமக்காரர்களில் தலையானவர்கள் என்று நம் நகர வீட்டுரிமையாளர்களைத் தான் சொல்லவேண்டும்.

## ஜே பி.

இரண்டு அறைகள் கொண்ட வீட்டிற்கு கூசாமல் ரூபா 500 வாடகை கேட்கும் மனிதர்கள் வாழ்கிறார்கள். அதுமட்டுமல்ல, அரசியல் சட்டம் 19 (அடிப்படை உரிமைகள்), 21ஆம் பிரிவுகளுக்கு எதிராக குடியிருப்போர் மீது வீட்டுச் சொந்தக்காரர்கள் அடிமைத்தனத்தை புகுத்த முயலகிறார்கள்.

பேசுவதற்குக்கூட வீட்டு உரிமையாளர்களிடம் அனுமதி வாங்க வேண்டிய நிலையில் மத்தியதரவர்க்கம் சென்னை போன்ற பெருநகர்களில் வாழ்ந்துக் கொண்டிருக்கிறது ஏற்கனவே பயப்படுவதற்கு மட்டும் தான் தனக்கு உரிமையுண்டு என்று எண்ணும் நடுத்தர வர்க்கம் இன்னும் கொஞ்சநாளில் பயப்பட கூட வீட்டுக்காரர்களின் அனுமதி வேண்டி நின்றாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இருப்பிடம் என்பது ஏதோ ஒரு கூரை மட்டுமல்ல, அப்புறம் நமது அதிகாரிகள் சாக்கடைகள் மீதே வீடு கட்டத் தொடங்கி விடுவார்கள். இருப்பிடம் என்பது சுத்தமான காற்று, வெளிச்சம்,



நீலகிரிமாவட்டத்தில் கோத்தகிரியில் கக்குச்சி என்ற இடத்தில் தாயகம் திரும்பியோருக்காக 'ஐலண்ட் டிரஸ்ட்' கட்டியுள்ள வீடுகள் இவை

# பிறப்புரிமை!

குடிநீர், சாலைவசதி மற்றும் நல்ல கழிப்பிட நீர் அற்றும் வசதி போன்றவைகளையும் உள்ளடக்கியது,

சுத்தமான காற்று என்பது இனி கிடைக்காது போல இருக்கிறது. கழிவுநீரும், குடிநீரும் கலந்து நாட்டில் வியாதிகள் வீடுகொண்டு களி நடனம் புரிகிறது. சுத்தமான கழிப்பிட, நீர் அகற்றும் வசதியின்மையால், கொசுக்கள் பெருகி மலேரியாவில் இருந்து மூளைகாய்ச்சல்வரை எல்லா வியாதிகளின் உற்பத்தி துறையாக பணிபுரிகிறது.

இருக்கும் இடம், மற்றும் சூழ்நிலை குழந்தை உடல் உளவளர்ச்சி மற்றும் வடிவாக்கத்தை நிர்ணயிக்கும் அம்சம் எனவே ஆரோக்கியமற்ற சூழ்நிலை வருங்கால சமுதாயத்தை மிகவும் பாதிக்கும் அம்சமாக இருக்கும்.

இருப்பிடம் வசதியில்லாதவன், கல்வி பெற முடியும் என்பதையும் எங்கேயாவது கதை, சினிமாவிலும்தான் பார்க்க முடியுமே தவிர நிஜ வாழ்க்கையில் காண்பது அரிது.

இருப்பிடம் என்பது மனிதனின் பிறப்புரிமை அவனுக்கு பாதுகாப்பு தருவதாக சொல்லும் அரசாங்கம் இந்த அனைத்துலக வீடற்றோர் உரைவிட ஆண்டில் என்ன செய்யப் போகிறது. O

## நாளை நமதே

கூனி குறுகிவிட்டோம், — இனியும்
குனிந்து நடப்பதில்லை
ரத்தம் இழந்துவிட்டோம்-நெஞ்சு
சத்தம் மறந்துவிட்டோம்.

உரிமை இழந்துவிட்டோம் — இனியும்
உணர்வை இழப்பதில்லை
சிந்தியே பழகிவிட்டோம் — இனிமேல்
சிந்திக்க தொடங்கிவிட்டோம்

ஏணியாய் அமைந்ததனால்-அவர்கள்
ஏற்றம் பெற்றுவிட்டார் — நாங்கள்
சீற்றம் அடைந்துவிட்டோம் புது
தோற்றம் பெற்றுவிட்டோம்

மாற்றம் தேவை இங்கே-அதை
மாற்றும் கைகள் இங்கே....
நேற்றும் இன்றும் போல இல்லை
நாளை நமதே தோழா....

கே. கணேஷ் குமார்
கர்நாடகம்

புள்ளி விபரம் :

# நடைபாதையில் வாழ்வோர் தொகை

வீடற்றவர்கள் இவ்வுலகில் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்பதை ஐ.நாடுகள் சபையில் கூட இன்னும் சரியான தொகையை கண்டுப்பிடிக்க முடியவில்லை. ஆனால் 1970க்கும் 80க்கும் இடையில் சுமார் 26.3 கோடி வீடுகள் அவசியமாகத் தேவைப்படும் என்று மட்டும் அவர்களால் கூறமுடிந்தது அதாவது ஒருநாளைக்கு 75,000 வீடுகள் என்ற கணக்கில் அடுத்த பத்து வருடங்களுக்கு வீடுகள் கட்டப்பட வேண்டும்.

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் உலக மக்கள் தொகையில் சுமார் 85 வீதமானோர் கிராமப்புறங்களில் வாழ்ந்தார்கள் நூற்றாண்டின் நடுப்பகுதியில் 63 வீதம் வாழ்கிறார்கள். கி.பி.2000ம் ஆண்டில் 50 வீதத்துக்கும் குறைவானவர்களே கிராமப்புறங்களில் வாழ்வார்கள் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

உலகவரலாற்றிலேயே முதல் தடவையாக கி.பி.2000 ஆண்டில்தான் கிராமப்புறங்களில் மக்கள் தொகை மிகக்குறைவாகப் போகிறது என்று அனைத்து நாடுகள் தொழிலாளர் நல நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஹாங்காங் நகரில் 16, கௌதமலா நகரில் 30, சந்தியாகோ நகரில் 33, அடிஸ் அபாபா (எதியோப்பியா) நகரில் 90 கல்கத்தா நகரில் 33, நைரோபியில் 38 சதவீதமானோர்கள் சேரியிலும், தெருவிலும் வாழ்கிறார்கள். இந்தியாவில் 1981 புள்ளி விபரப்படி 60 லட்சம் குடும்பங்கள் அல்லது மொத்த நகர்ப்புற குடும்பங்களில் 20.86 சதவீதம் குடிசைப் பகுதியில் தான் வசிக்கிறார்கள்.

நகரச் சேரிப்புறங்களிலும் தெருக்களிலும் மக்கள் வாழ்வது மட்டும் பிரச்சனையாக இருக்கவில்லை. உலக சுகாதார ஸ்தாபன புள்ளி விபரங்களின்படி கிராமப்புறங்களிலும் வாழும் 90 சதவீதமானோர் சுத்தமான குடிநீர் வசதியின்மையால் கஷ்டப்படுகிறார்கள்.

அதுமட்டுமல்ல

ஒழுங்கான மலசல கூட வசதிகள் இல்லாமையால் இவ்வுலகில் வாழும் சுமார் 100 கோடி மக்கள் எண்ணற்ற நோய்களுக்கு ஆளாகின்றனர், அனைத்து நாடுகள் சபையின் யூகத்தின்படி லத்தீன் அமெரிக்காவில் 65, ஆபிரிக்காவில் 54, இந்தியாவில் 80 சதவீதமானோரும் முறையான மலசலகூட வசதிகள் பெற்றிருக்கிறார்கள்.

மேற்குறிப்பிட்ட இந்த புள்ளி விபரங்கள் நகர்ப்புறங்களில் வாழும் மக்களிடையே எடுக்கப்பட்ட விபரங்கள் ஆகும். கிராமப்புறங்களில் முறையான விபரங்கள் எடுக்கப்பட்டதாக தெரியவில்லை.

-'பொறுக்கு மணி'

# ஒரு மரம் போதும்

10 பேருக்கு ஓர் ஆண்டுக்குத் தேவையான பிராணவாயுவை ஒரு ஏக்கரில் வளர்ந்த மரங்கள் தருகின்றன.

10 குளிர்சாதனப் பெட்டிகள் 24 மணிநேரம் தொடர்ந்து வேலை செய்து தரும் குளிர்ச்சியை ஒரு தனிமரம் தன் நிழல் மூலம் தந்து வருகிறது.

-இவ்வாறு கல்கத்தா வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் பணிபுரியும் பேராசிரியர் டாக்டர் டி எம் தாஸ் தெரிவிக்கிறார்.

# நோய் தீர்க்கும் மருந்து



மனிதகுலம் தோன்றியதில் இருந்தே நோய்களும் அவனுடன் இருந்துவருகின்றன. அந்த அந்த காலத்திற்கும் இடத்திற்கும், சூழ்நிலைக்கும், ஏற்ப மருத்துவமுறைகளும் வளர்ந்து வந்து இருக்கின்றன. கி.மு.2000-ல் இந்தியா கிரேக்கம், எகிப்து போன்ற இடங்களில் மருத்துவ முறைகள்முறையாக தோன்றலாயின இந்தியாவில் ஆரிய சித்த வைத்திய முறைகளும், அராபிய நாடுகளில் யுனானி வைத்தியமும் ஏற்படலாயிற்று இத்தாலியில் அல்லோபதியும் ஜெர்மனியில் ஹோமியோபதியும் சீனாவில் அக்குபஞ்சர் பிலிப்பைன்ஸில் அக்குபிரஷர் முறைகளும் ஏற்படலாயிற்று.

## உடல் நலம்

கி.பி.2000 குள் உலக மக்கள் அனைவருக்கும் சுகாதாரம் என்ற உலக சுகாதார நிறுவனத்தின் தாரக மந்திரத்தின் அடிப்படையில் ஒவ்வொரு மனிதனும் நோயை பற்றிய அறிவும் காரணமும் தீர்க்கும் வழிகளையும் அறிந்து காரணமும், தீர்க்கும் வழிகளையும் அறிந்து இருத்தல் வேண்டும்.

உடல் நல பராமரிப்பு என்பது ஒருவருடைய உரிமை மட்டுமல்ல பெறுப்பும் ஆகும். உடலநலம் பற்றிய அடிப்படை விஷயங்களை நன்கு தெரிந்து வைத்திருப்பதுடன் சுயமாக பேணுவதை பிரதான நோக்கமாக கொள்ள வேண்டும் சாதாரண மனிதர்கள் கூட எளிமையான தகவல்களின் உதவியுடன் மிக சாதாரணமான உடல் நலப் பிரச்சினைகளுக்கு தங்கள் நாடுகளிலேயே விரைவாகவும் மலிவாகவும் பல சமயங்களில் டாக்டர்கள் செய்ய முடிந்ததை விட சிறப்பாக சிகிச்சையை மேற்கொள்ளவும் நோயை தடுக்கவும் முடியும். மருத்துவ அறிவு ஒருசிலரிடையே ரகசியமாக இல்லாமல் பரவலாக்கபடவேண்டும் அடிப்படை உடல்நலம் பராமரிப்பு ஒருவர் மற்றவருக்கு வழங்குவதல்ல. மாறாக ஒவ்வொருவரின் கடமையாக உணரவேண்டும். ஆனால் அதே சமயம் உடல் நலப்பராமரிப்பில் ஒருவர் தன்னுடைய வரம்புகளை தெரிந்து கொண்டும் செயல்பட வேண்டும்.

## நவீன மருத்துவம்

இன்று மிகவும் பிரபலமாக உள்ள ஆங்கிலேய வைத்திய முறையானது முன்னேறி இருந்த போதிலும், விரைவில குணம் அளித்த போதிலும் இந்த மருந்து வகைகள் பிற உபாதைகள் தரவல்லனவாக இருந்து வருகின்றன.


## மாற்று மருத்துவமுறை

ஆங்கில மருத்துவமானது நமது இந்திய மக்களின் சூழ்நிலைக்கு ஏற்ப வளர்ந்த ஒரு மருத்துவம் அல்ல. உலக போரினாலும், இந்தியாவில் ஆங்கிலேயர் ஆதிக்கம் மேலிட்டதாலும் இந்திய மருத்துவ முறைகள் நசுக்கப்பட்டன. மேலும் இங்கு இருந்த ராணுவத்தினருக்கு தான் முதன்முதல் ஆங்கில மருத்

## 'ஜோஸ்மா'

துவம் புகுத்தபட்டு பின்னர் இந்தியா முழுவதும் சூழ் கடிக்கப்பட்டுவிட்டது இன்று ஆங்கில மருத்துவத்திற்கு மாற்று முறையாக அக்குபஞ்சர் அக்கு பிரஷ்ஷர் போன்ற முறைகள் பிரபலமாகி வருகின்றன. இந்த நிலையில் நாம்மட்டும் ஆங்கில மருத்துவத்தின் அகால சவகுழியில் விழுந்து விடாமல் மாற்றும் மருத்துவ முறைகளை இடம், சூழ்நிலை போன்றவற்றை அனுசரித்து தேவையான முறையை பின்பற்றுவதே சிறப்பானதாக அமையும்.

இன்று மனிதனுக்கு தேவையான அடிப்படை மருந்துகள் என்று சொல்லப் படுகின்ற அனைத்து நோய்களுக்குமான மருந்தாக 164 வகைகளை WHO சிபாரிசு செய்துள்ளது. ஆனால் அதே சமயம் நமது இந்தியா போன்ற நாடுகளில் கிட்டதட்ட 6000க்கு மேற்பட்ட மருந்துவகைகள் பல்வேறு பெயர்களில் பல்வேறு விளம்பரங்களுடன் நாளுக்கு நாள் வெளிவந்து கொண்டு இருக்கின்றன. மக்களும் விளம்பரங்களை கண்டு மதி மயங்கி ஆங்கில வைத்தியத்திற்கு தங்களை அடமானம் வைத்து விடுகின்றார்கள். இன்று சாதாரண நோய்களுக்குகூட வீரியமிக்க மருந்துகள் கொடுக்கப்பட்டு வருகின்றன. இதனால் மனித உடலில் இயற்கையாகவே இருந்து வரும் நோய் எதிர்ப்புச்சக்தி மழுங்கடிக்கப்படுவதுடன், அந்தவியாதி மீண்டும் அம்மனிதனுக்கு தோன்றும் போது வேறு வலிமையான மருந்து இல்லாத பட்சத்தில் அவன் அகால மரணம் அடைகின்றான் அல்லது அந்த நோயில் இருந்து மீள முடியாமல் தவிக்கின்றான். O





1986யில் புதிராக அறிமுகம் செய்யப்பட்ட பிரதமரின் 20 அம்சத்திட்டத்தை வாசகர்கள் தெரிந்து கொள்ளும் வண்ணம் விரிவாக தருகிறோம்.

1. கிராமப்புற வறுமை மீது போர்,

2. மழை விவசாய அபிவிருத்திக்கான யுக்தி

3. பாசனத்துக்கான நீரை சிறப்பாக பயன்படுத்துதல்

4. சிறப்பான அறுவடைகள்

5. நிலச் சீர்திருத்தங்களை அமுல் செய்தல்

6, கிராமப்புற தொழில்களுக்கான விசேஷ திட்டம்

7. தூய குடிநீர்

8, அனைவரும் ஆரோக்கியம்

9. இரண்டு குழந்தை நெறி

10. கல்வி விரிவுப் பணி

11 ஷெட்யூல்டு வகுப்பினர், ஷெட்யூல்டு பழங்குடியினருக்கு நிதி

12. பெண்களுக்குச் சமத்துவம்

13 இளைஞர்களுக்குபுதிய வாய்ப்புக்கள்

14, மக்களுக்கு வீட்டு வசதி

# பிரதமரின் இருபது அம்சத் திட்டம்

15. குடிசைப்பகுதி அபிவிருத்தி

16. வனவளர்ப்புக்கு புதிய யுக்தி

17. சுற்றுப்புற சூழல் பாதுகாப்பு

18. நுகர்வோர் நலன்

19. கிராமங்களுக்கு மின் வசதி

20. திறைவு தரும்நிர்வாகம்

## கிராமப்புற வறுமைமீது போர்

1. ஒவ்வொரு கிராமப்புறத்தில் உள்ள எல்லா ஏழை மக்களுக்கும் வறுமையை போக்குவதற்கான திட்டங்களின் பயன்கள் கிடைப்பதை நாம் உறுதி செய்வோம்.

2. கூலி வேலை வாய்ப்புக்கான திட்டங்களை பகுதி வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் மனிதவள மேம்பாட்டுத் திட்டங்களுடன் இணைத்துதேசிய மற்றும் சமூக சொத்துக்களான பள்ளிக் கட்டிடங்கள், சாலைகள், குளங்கள், மற்றும் எரிபொருள் மற்றும் தீவன கையிருப்புக்களை உருவாக்குவதை உறுதி செய்வோம்.

3, பல்வேறு கிராமப்புற வளர்ச்சித் திட்டங்களை உற்பத்தித் திறன் அபிவிருத்தி கிராமப்புற வேலை வாய்ப்பு அதிகரிப்பு ஆகியவற்றுடன் ஒருங்கிணைப்போம்.

4. கைத்தறி அபிவிருத்தி, கைத்தொழில் அபிவிருத்தி கிராம, சிறுதொழில் அபிவிருத்தி, சுய வேலை வாய்ப்புக்கான திறன்களை வளர்த்தல் ஆகியவற்றை மேற்கொள்வோம்.

5. பஞ்சாயத்துக்கள், கூட்டுறவு அமைப்புகள் மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களுக்கு புத்துயிர் அளிப்போம்.

## மழை விவசாய அபிவிருத்திக்கான யுக்தி

1. ஈரப்பதத்தை பராமரிப்பதற்கான தொழில் நுணுக்கத்தை விருத்தி செய்தல் மற்றும் நிலம், நீராதாரங்கள் ஆகியவற்றை சிறப்பாக பராமரித்தல் ஆகியவற்றை மேற்கொள்வோம்.

2. பொருத்தமான அபிவிருத்தி செய்யப்பட்ட விதைகளை உருவாக்கி, விநியோகம் செய்தலை மேற்கொள்வோம்.

3. வறட்சிப் பாதிக்கக்கூடிய பகுதிகளுக்கான திட்டங்கள் ஆகியவற்றில் பொருத்தமான மாற்றங்களை செய்வதன் மூலம் வரட்சியினால் ஏற்படக்கூடிய மதிப்பினை குறைப்போம்.

## பாசனத்துக்கான நீரை சிறப்பாக பயன்படுத்தல்

1. மீன்பிடிப்புப் பகுதிகளை உருவாக்குதல் மற்றும் ஆற்றுப் படுகைகள் டெல்டாக்களில் வடிகால் வசதியை அபிவிருத்தி செய்தல் ஆகியபணிகளை நிறைவேற்றுவோம்.

2. பாசனப் பகுதிகளில் தண்ணீரைப் பயன்படுத்துவதை சிறப்பாக நிர்வகிப்போம்,

3. தண்ணீர் தேங்கி நிற்றல், உப்புக்கள் மற்றும் வீணாக செலவிடல் ஆகியவற்றைத் தவிர்ப்போம்.

4. மேற்பரப்பு நீரையும்' நிலத்தடி நீரையும் பயன்படுத்துவதை ஒருங்கிணைப்போம்.

## சிறப்பான அறுவடைகள்

1. கிழக்குப் பிராந்தியம் மற்றும் குறைந்த உற்பத்தித் திறன் உள்ள மற்ற பகுதிகளில் நெல் உற்பத்தியில் புதியபுரட்சிகளை ஏற்படுத்துவோம்.

2. உணவு எல்லையில் சுய சார்பு நிலையை அடைவோம்.

3. பருப்பு வகைகளின் உற்பத்தியை அதிகரிப்போம்.

4. பழங்கள், காய்கறிகள் ஆகியவற்றை பயிரிடுவதை தீவிரப்படுத்துவோம்.

5. விவசாய விளைபொருட்களை நவீன முறையில் சேமித்து வைத்தல், பதப்படுத்துதல், விற்பனை செய்தல் ஆகியவற்றிக்கான வசதிகளை அதிகரிப்போம்.

6. கால்நடைகள் மற்றும் கறவைமாடுகளை வளர்க்கும் விவசாயிகளின் உற்பத்தி திறனை அதிகரிக்க உதவி செய்வோம்.

7. மீன்பண்ணைகள் மற்றும் கடல் மீன் பிடிப்பினை வளர்ப்போம்.

## நிலச் சீர்திருத்தங்களை அமல் செய்தல்

1. நில தஸ்தாவேஜுகளை முழுக்க தொகுப்போம்.

2. விவசாய நில உச்சவரம்பினை அமுல் படுத்துவோம்.

3. உபரி நிலத்தை மற்றவர்களுக்கு விநியோகம் செய்வோம்.

## கிராமப்புறத் தொழிலாளர்களுக்கான விசேஷத் திட்டம்

1. விவசாயம் மற்றும் தொழில்களில் இயக்கரீதியாக திரட்டப்படாத தொழிலாளருக்கு குறைந்தபட்ச கூலி கிடைக்க வகைசெய்வோம்.

2. கொத்தடிமை ஒழிப்புச் சட்டங்களை முழுக்க அமுல் செய்வோம்.

3. கொத்தடிமைகளின் மறுவாழ்வுக்கான திட்டங்களில் சேவை நிறுவனங்களை ஈடுபடுத்துவோம்.

## தூய குடிநீர்

1. எல்லா கிராமங்களுக்கும் பாதுகாப்பான குடிநீரை வழங்குவோம்.

2. அத்தகைய குடிநீர் சப்ளைக்கான அமைப்புகளை சிறந்த முறையில் பராமரிக்க ஸ்தல சமூகங்களுக்கு உதவி செய்வோம்.

3. ஷெட்யூல்டு வகுப்பினர் மற்றும் ஷெட்யூல்டு பழங்குடியினருக்கு குடிநீர் வழங்குவதற்கு விசேஷ கவனம் செலுத்துவோம்.

(மீதி அடுத்த இதழில்)

# தோட்டப் புறத்து (நாட்டுப்) பாடல்களில் காதல் சுவை

## (5)

மனதைப் பறிகொடுத்து காதல் வயப்பட்டு விட்டால் போதும். ஒருவரை ஒருவர் நினைத்து இனிமை கொள்வது காதலர்களுக்கே யுரிய வெளிப்பாடு.

ஒருவரது நடையுடை, பாவனை, பேச்சு, அங்க அவயவங்களில் மற்றவர் காண்கிற அழகு, இனிமை, இன்பம்....

''சின்ன சின்ன வெற்றிலையாம்
செட்டிக்கடை மிட்டாயாம்
மார்க்கட்டு மரிக்கொழுந்தே
மணக்குதடி கொண்டையிலே''

போட்டால் சுவைக்கும் வெற்றிலையாக -செட்டிக் கடையிலுள்ள இனிப்பு மிட்டாயாக, சந்தையிலே விற்கிற மரிக்கொழுந்தாக விளங்கும் அவளுடைய கொண்டையே மணக்கிறது அவனுக்கு.

அந்த கொண்டையிலே தலைகனக்க பூவும் வைத்திருக்கிறாள். அவனுக்கு ஒரு சந்தேகம் வந்துவிடுகிறது-

''தண்டைச் சிலம்புக்காரி
தாழ்வார வீட்டுக்காரி-உன்
பூ முடிக்கும் கூந்தலிலே
பூ நாகம் தீண்டாதோ?''

அந்த கூந்தல் மீது அவனுக்கு எப்பவும் ஒரு கண். கண்ணங்கருத்து அடர்த்தியாக இருக்கும் அவள் கூந்தல் அவனுக்கு பல கற்பனையை ஊட்டுகிறது. கேட்கிறான்-

''மானுவந்து கூடுகட்டும-ஏம்புள்ள
மயிலு வந்து முடையிடும்
தேனுவந்து ராட்டு எடுக்கும்-அடி
தேன்மொழியாள் உன்கூந்தலிலே''

மான்வந்து கூடுகட்டுமாம்; மயில் வந்து முட்டையிடுமாம்; தேன் வந்து கூடுகட்டுமாம் அவள் கூந்தலில்.

அவளுடைய கூந்தல் மட்டும் தானா அவனுடைய முடியழகும் அவளை மயக்குகிறது. அவனுடைய முடி மட்டுமல்ல; கண்ணும், பல்லும் அவளுக்கு அழகாக இருக்கிறது.

''உருண்டை முடியழகா
உல்லாச கண்ணழகா
ஈச்சங்காய் பல்லழகா
என்மன்னா மன்னவனே''

அவளுடைய மின்னிடும் கால்மிஞ்சி, மினுக்கும் தலை கூந்தல், பளிச்சிடும் பல்லழகை பார்த்து மகிழ்ந்தவனுக்கு திடீரென்று ஒரு கவலை.

''மின்னுதடி கால்மிஞ்சி
மினுங்குடி தலைக்கூந்தல்
சிந்துதடி பல்லழகு-ஈரை
கெடுக்குடி காவிக்கரை''

வெற்றிலை போட்டு போட்டு காவி ஏறிப்போய் இருக்கிறது. அந்த காவி அவளுடைய சிந்தும் பல்லழகை கெடுக்கிறது.

பல்போனால் சொல் போச்சு. இந்த காவி பல்லை போக்கிவிடும்; பல்போனால் சொல்லும் போய்விடும் ஆனால் அந்த பல் காவியும் சொல் பெறுமாம். அந்த சொல்லும் இனிய மணம் பெறுமாம். எப்போது?

## 'தேனூரன்'

''பல்லும் பணம் பெறுமே
பல்காவி சொல்பெறுமே
சொல்லும் மணம் பெறுமே
சோவைக்கிளி வாய்த்தாலே''

அவனுடைய விருப்பப்படி அவள் வாய்த்து விட்டால் காவிப்பிடித்த அவள் பல் பணம் பெறும்; பல்லில் படிந்த காவி சொல் பெறும்; அந்த சொல்லும்மணம்பெற்று விடுமாம்.

சொல்மட்டுமா? அவள் உடம்பே மணக்கிறது அவள் பூசிக்குளித்த உடம்பில் மஞ்சள் மணக்கிறது. கொழுந்து பறிக்கின்ற அவள்மீது(தேயிலை) கொழுந்து மணமும் மணக்கிறது.

''மஞ்சள் மணக்குடி
மாதரசி ஒன்மேலே
கொழுந்து மணக்குடி
கூச்சக்கார குட்டி தன்னாலே

(தொடரும்)

## மரணம்

-வண்ணச்சிறகு-

ஒரு நண்பனைப்போல
சாவு வரும்;
ஒரு காதலியைப் போல
என்னைத் தழுவும்;
ஒரு நிலாக்கால
இரவைப் போல
என்னில் மெல்ல கவியும்.

முழுமையில்
என்னை
மூழ்கச் செய்யும்.

மரணம் மட்டும்
செத்துப் போகும்

# மக்கள் மறுவாழ்வு மன்றம்-மாதர் சங்கம்

நீலகிரி மாவட்டம் கோத்த கிரி பகுதியில் மேலும் பல மக்கள் மறுவாழ்வு மன்றம் மாதர் சங்கங்கள் அமைக்கப் பட்டுள்ளன.

அவற்றின் நிர்வாகிகள் செயற்குழு உறுப்பினர்கள் வருமாறு-

## பாக்கிய நகர்

தலைவி: ஏ.ஜானகி, உப தலைவி: எஸ்.ராமுகிளி, செயலாளர்: கே.லெட்சுமி, உப செயலாளர்: வி.பாப்பாத்தி, பொருளாளர்: வி.ராஜம்மாள்.

செயற்குழு உறுப்பினர்கள்:

ஏ.ஜானகி, எஸ்.ராமுகிளி, கே.லெச்சுமி, வி.பாப்பாத்தி, வி.ராஜம்மாள், என்.மனோரஞ்சனி, டி.இந்திராம்தவி, என்.ஜெயா, டி.ஜெயலெட்சுமி எஸ்.காமாட்சி, பி.காமாட்சி, எம்.ஜானகி, அன்னலெட்சுமி, தனம்.

ஊக்குனர்: திருமதி டேவிட் சரோஜா.

## சக்தி நகர்

தலைவி: எம். விஜய லெட்சுமி, உபதலைவி: எஸ். நட்சத்திரம், செயலாளர்: கே. பத்மாவதி, உதவிச்செயலாளர் எஸ்.லட்சுமி, பொருளாளர்: கே.வள்ளியம்மை.

செயற்குழு உறுப்பினர்கள்:

எஸ்.சரஸ்வதி, கே.புஸ்ப வள்ளி, எம்.முருகம்மா, எஸ். லட்சுமி, ஏ.வள்ளியம்மை, எம்.விஜயகலா, எஸ் ராஜேஸ் வரி, வி.கருப்பாயி, கே.பார் வதி, கே.சிவபாக்கியம், எம். செல்லம்மா, கே.முனியம்மா, எஸ்.ஞானசுந்தரி, எஸ்.தெய் வானை, ஆர்.ராமாயி, வி. வள்ளியம்மை, கே வசந்தி, எஸ்.கமலம், ஆர். சரோஜா, ஜி. பாக்கியம்.

ஊக்குனர்: கே.பத்மாவதி.

## ஓம் நகர்

தலைவி: காமாட்சி, உப தலைவி: தங்கம்மா, செய லாளர்: ராணியம்மாள், உதவிச் செயலாளர்: விஜய லெட்சுமி, பொருளாளர்: பர மேஸ்வரி.

செயற்குழு உறுப்பினர்கள்:

மின்னல், லட்சுமி, விஜயா, விஜயகொடி, புஸ்பவள்ளி ஜெயலெட்சுமி, பருவதம் ஜெயகொடி, புஸ்பவள்ளி, ராமாயி, சரஸ்வதி, செல்வ மணி, கமலம், லலிதா, அன்னக்கிளி, மல்லிகா, ஜெயமிலா, ஜோதிமணி, மல்லிகா, ராஜமணி.

ஊக்குனர்: வி.சீதாலெட்சுமி, எம்.மரகதம்.

## இடுகரை

தலைவி: புஸ்பம், உப தலைவி: கே. கணேசம்மா, செயலாளர்: பார்வதி, உதவிச் செயலாளர்: ஜானகி பொரு ளாளர்: வி மணி.

செயற்குழு உறுப்பினர்கள்:

சுமதி, சரசு, வி.மணிமாலா, எஸ்.புஸ்பலீலா, மகேஸ்வரி, மாரியம்மா, விநோதமணி, பூரணம், ராஜேஸ்வரி, இந்தி ராணி, பட்டாயி, நாகம்மா, வள்ளியம்மை, தெய்வானை, பார்வதி, தனலெட்சுமி, காமாட்சி, ஜெயமேரி, தேன் திலகவதி, கவியரத்தினம்.

ஊக்குனர்: திருமதி, தவ மணி நாகராஜ்.

## மாரிஸ் நகர் கோத்தகிரி

தலைவி: ரா.லெச்சுமி, உப தலைவி: பீ தங்கம்மா, செய லாளர்: கே.லெச்சுமி, உதவிச் செயலாளர்: ஆர். ராதா, பொருளாளர்: எஸ் கமலம்.

செயற்குழு உறுப்பினர்கள்:

ஆர்.பொன்னம்மா, எஸ். வேலம்மா, ஆர்.மீனாம்பாள், பி.பஞ்சவர்ணம், எஸ். மாரி யாயி, எஸ்.பழனியாயி, எஸ். லெச்சுமியாயி, ஆர். லிங்க மலர், கே.கன்னியம்மா, செல்லம்மா, எஸ். சின்னம்மா கே. வீரம்மா, எம். லில்லி, ஆர். ராணி, பீ. அமராவதி, கே பரமேஸ்வரி, எஸ்.நாக சோதி, ஆர். பாப்பாத்தி, எஸ் நாமணி, கே.கருப்பாயி, கே.செல்லம்மா.

ஊக்குனர்: ஆர் ராஜேஸ்வரி மாரிஸ் நகர்.

## மாதா நகர், அவுக்கல் கோத்தகிரி

தலைவி: காளியம்மாள், உப தலைவி: கிட்ணம்மாள், செயலாளர்: வீ ராணி. உதவிச் செயலாளர்: இந்தி ராணி, பொருளாளர்: பரமேஸ் வரி.

செயற்குழு உறுப்பினர்கள்:

கமலம், வள்ளியம்மாள், ஞானம்மாள், பெருமாயி, சரஸ் வதி, புஸ்பவள்ளி, ஜெயக் கொடி, செல்லம், பழனியம் மாள், பாலாயி, பரமேஸ்வரி, சாந்தி, பச்சையம்மா, நாகம்மா, ஜோதி.

ஊக்குனர்: ஜீ நிரஞ்சலா தேவி, ஆவிக்கல், கோத்தகிரி.

---

# தாயகம் திரும்பி...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு அளிக்கப்படும் தொடர் கடனாக அளிக்கவும் இத் திட்டத்தில் வசதி செய்யப்பட் டுள்ளது.

தவிர ஏற்கனவே வியாபார, வீட்டுக்கடன் வாங்கியவர்கள் கடை, ஸ்டால்களுக்குவாடகை செலுத்த கடனுதவி அவசியம் என்றால் அவர் வாடகை செலுத்தும் செலவை கடனாக பெற தடை இல்லை.

ஆனால் இந்ததிட்டத்தின் ஒரு குடும்பம் முன்னதாகவே வியாபாரத்திற்கான கட்டி டத்தை கட்டியிருப்பார்களே யானால், அவர்களுக்கு இந்த வாடகை கடன் கிடைக்காது.

கிராம நகரப் புறங்களில் வீடு கட்டுவதற்கான கடனுதவிக்கு தகுதிவாய்ந்தவர்கள், இந்தி யாவில் (தமது பூர்வீக கிராமம்-சொந்தஊரில்) பழையவீடுகள் இருக்குமானால் உடனடியாக திருத்தியாக வேண்டும் என்ற நிலையில் இருக்கும் வீடு களை திருத்திக் கொள்ளலாம் கடனுக்குரிய தொகைக்கு அந்த வீட்டை அரசுக்கு அடமானம் வைப்பதன் அடிப் படையில் பெறலாம்.

(மேலும்சில விபரங்கள் அடுத்த இதழில் தொடரும்)

---

# தாயகம் திரும்பியோர் விழிப்புணர்ச்சி முகாம்

தாயகம் திரும்பியோருக் கான விழிப்புணர்ச்சி முகாம் டிசம்பர் 27, 28 தேதிகளில் முத்தரசநல்லூரில் நடைபெற் றது.

பீப்பில்ஸ் — சாலிடரிட்டி அசோசியேசன் ஏற்பாடு செய்திருந்த இம் முகாமில் தாயகம் திரும்பியோர் வர லாறு, அவர்களுக்கான அரசின் மறுவாழ்வுத் திட்டங் கள் நடைமுறைப் பிரச்சனை கள், தீர்வுகள், இன்றைய சூழ் நிலையில் விழிப்புணர்ச் சிக்கான அவசியம், இலவச சட்ட உதவி மற்றும் ஆலோ சனைக் கழக திட்டங்கள், பயன்கள் முதலான பொருள் கள் குறித்து விளக்கவுரைகள் வழங்கப்பட்டன.

மத்திய அரசு விளம்பரத் துறை அதிகாரி திரு.தெரஸ் நாதன், வழக்கறிஞர் திரு எம். காமராஜ், மேற்படி சங்கத்தை சார்ந்த திரு.பி.எஸ்.நாதன், திரு.நல்லையா ஆகியோர் விளக்கவுரை அளித்தனர். ○

Editor & Publisher: T. S. RAJU, 1, South Gangai amman koil 2nd Street, Madras 600 094. Printed: L.S. Srinivasan at Jai Kalidas Press, 29, B. E. Colony, 4th Street, Madras-24

Regd. No. R.N. 42556/83 Regd. No. TN/MS (C) 702 MAKKAL MARUVAZHVOO

தாயகம் திரும்பியோரின் வழிகாட்டி

# மக்கள் மறுவாழ்வு

தொடர்பு முகவரி:
அஞ்சல் பை எண். 5560
சென்னை—600 094

## சென்ற மாதம்:

# தமிழகத்தில் மொழிப் போராட்டம்! தமிழீழத்தில் இயக்கங்கள் மோதல்!!

அமைதி ஆண்டான 1986 அவநம்பிக்கையுடன் முடிவடைந்தது என்பதோடு மாத்திரமல்ல- பல்வேறுபட்ட கிளர்ச்சிகளோடு முடிந்தது.

தமிழகத்தில் பாட்டாசு வெடிகளைத்தான் இத்தனை காலம் கேட்டிருக்கிறோம். இப்போது குண்டு வெடிகளை கேட்கத் தொடங்கி விட்டோம் என்று அனைவரும் சொல்லும் அளவிற்கு அடுத்தடுத்து பல வெடிகுண்டு சம்பவங்கள் நடந்துள்ளன.

சென்னை தட்சிண பாரத ஹிந்தி பிரசார சபையிலும், மதுரை தபால் நிலையத்திலும் மதுரை, போத்தனூர் ஆகிய இடங்களில் ரயில்பாதைகளிலும் குண்டு வெடித்துள்ளன. கடைசியாக திருச்சி முத்தரசநல்லூரில் ரயில் பெட்டியில் வெடிகுண்டு வெடித்து ஒருவர் மாண்டுள்ளார் 25 பேருக்கு காயம் ஏற்பட்டுள்ளது மேலும் பல வெடிகுண்டு புரளிகள் கிளம்பியவாறு இருக்கின்றன. பல பஸ்கள் தீ விபத்துக்குள்ளாகியும் உள்ளன.

※

மத்திய அரசின் இந்தி திணிப்பை எதிர்த்து தமிழகத்தில் மிக உக்கிரமாக மொழி போர் நடந்து வருகிறது. தி.மு.க.வின் சட்ட எரிப்பும் தொடர்ந்து நடந்துக் கொண்டிருக்கிறது. மாணவர்களும் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

17-ந் தேதி முன்னாள் தமிழக முதல்வரும், தி.மு.க தலைவருமான கலைஞர் கருணாநிதி அவர்கள் சட்டத்தை எரித்து சிறை புகுந்துள்ளார். தாம் எடுத்துக் உறுதிபிரமாணத்திற்கு எதிராக சட்டத்தை எரித்ததால் 10 எம். எல். ஏ.க்கள் எம்.எல்.ஏ பதவியிலிருந்து நீக்கப் பட்டுள்ளார்கள் இந்த பதவி நீக்கம் சரியானதல்ல என்று எதிர்கட்சிகள் கண்டனம் தெரிவித்துள்ளனர். பதவி நீக்குவது சம்பந்தமாக சட்டசபையில் எடுக்கப்பட்ட ஓட்டெடுப்பில், ஆதரித்து 131 வாக்குகளும், எதிர்த்து 24 வாக்குகளும் இடப்பட்டன. இ.காங்கிரஸ் வாக்கெடுப்பில் கலந்துக் கொள்வாது வெளிநடப்பு செய்தது.

※

தமிழகத்தில் மொழிப் போர் உக்கிரமடைந்திருக்கிற போது, ஈழத்தில் போராளிகளுக்கிடையே மோதல் நடந்தது. விடுதலைப் புலிகளுக்கும், ஈ. பி. ஆர். எல். எஃப்க்கும் கடுமையான சண்டை நடந்ததில் பல போராளிகள் மாண்டனர். யாழ்ப்பாணம் மட்டும் முழுக்க புலிகளின் கட்டுப்பாட்டிற்கு வந்திருப்பதாக செய்திகள் கூறுகின்றன.

இதற்கிடையில் விடுதலைப் புலிகளுக்கும், இலங்கைஅரசுக்கும் நடந்த இராணுவ வீரர்கள், விடுதலைபுலி வீரர்கள் பரிவர்த்தனை சம்பந்தப்பட்ட பேச்சுவார்த்தை வெற்றிகரமாக முடிந்து இரு இராணுவ வீரர்களை புலிகள் விடுதலை செய்ய, இரு விடுதலைப்புலிகளை இலங்கை அரசு விடுவித்துள்ளது.

இந்த வெற்றி ஒரு நம்பிக்கையை ஊட்டி இருபபதாகவும், இதை முதல்படியாக கொண்டு சண்டை நிறுத்த முயற்சிகளை மேற்கொள்ள இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவின் உதவியில்லாமலே இந்த முயற்சி சாத்தியமாகலாம் என்று இலங்கை தேசிய பாதுகாப்புத் துறை அமைச்சர் லலித் அத்துலத் முதலி கருத்து தெரிவித்திருந்தார். இக்கருத்து இந்திய அரசு மேற்கொண்டு வரும் மத்தியஸ்த செயலை அவமதிப்பாக இருக்கிறது என்று விடுதலை புலிகள் இயக்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

என்றாலும் அத்துலத் முதலி தெரிவித்ததற்கு ஏற்றார்போல் இலங்கை அரசும் விடுதலை புலிகள் இயக்கத் தலைவர்களை சந்திக்க தூதுக்குழு ஒன்றை அனுப்பி இருப்பதாக செய்திகள் கூறுகிறது.

கிறிஸ்மஸ் அன்றும் மறுநாள் போர் நிறுத்தமும் என்பது குறிப்பிடத்தக்கது.

※

இலங்கைததமிழர் பிரச்சனைக்கு தீர்வு காண இந்திய அரசு தொடர்ந்து முயற்சிகள் மேற்கொண்டுள்ளது கடந்த 17ந் தேதி மத்திய உள்துறை துணை மந்திரி ப. சிதம்பரம், வெளியுறவுத் துறை துணை மந்திரி கே. நட்வர்சிங் இருவரும் இலங்கைச் சென்று ஜயவர்த்தனா மற்றும் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வந்தனர்.

இதற்கிடையில், தமிழ் நாட்டில் போராளிகள் ஆயுதம் வைத்திருக்களாகாது என்று தமிழக முதல்வர் எம் ஜி. ஆர் தெரிவித்துள்ளார்.

※

'இங்குள்ள தமிழர் ஒன்றாதல் கண்டே எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்' என்றார் பாவேந்தர் பாரதி தாசன், அதற்கு மாறாக சொந்த மண்ணாகிய தமிழகத்திலேயே சொந்த மொழிக்காகப்போராடி சிறை செல்லும் நிகழ்ச்சிகளும், பதவி இழக்கும் நிகழ்ச்சிகளும் ஈழத்தில் தமிழ் இன விடுதலைக்காகவே தோன்றிய விடுதலை இயக்கங்கள் தங்களுக்குள்ளேயே சண்டையிட்டு மடியும் சம்பவங்களும்தமிழர்களின் பலத்தையும், நிலையையும் எடுத்துக் காட்டுவதாக இருக்கிறது. இது தமிழர்களின் எதிர்காலத்திற்கு குந்தகம் விளைவிக்கத் தக்க கசப்பான சம்பவங்கள்.....

- அ. பி.